**தமிழ் நாடு அரசு**

**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலம் - முஸ்லீம் இனத்தவரை பள்ளி பிறப்புப் இறப்பு பதிவேடுகளில் மதம் பற்றி குறிப்பிடுகையில் “ இஸ்லாம்” எனக் குறிப்பிடல் ஆணைகள் - வெளியிடப்படுகிறது

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிநஆபி)த் துறை.

அரசாணை (நிலை) எண்.
58 நாள்.08..06.2005.

படிக்கப்பட்டவை:

1. தமிழ் நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் 02.08.2000 நாளிட்ட கடிதம்.

2. ஆணையர் மற்றும் இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, எ.டி3/30001/2000, நாள்.03.01.2001 மற்றும் 15.10.2003.

3. மாநில சிறுபான்மையினர் அணையத்தின் உறுப்பினர் செயலர் 07.08.2001, நாளிட்ட கடித எண்.ஏ1/25/2000.

4. தமிழ் நாடு வக்ஃபு வாரிய முதன்மை செயல் அலுவலரின் கடித எண்.2692/01/ஈ5,நாள். 13.12.2001, 07.06.2002, 07.08.2002 மற்றும் 09.01.2003.
*********

தமிழ் நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லீம் லீக்-ன் தலைவர், முதலாவதாக படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் பிறப்புப் பதிவு நிலையங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் முஸ்லீம் குழந்தைகளைப் பதிவு செய்யும் போது மதம் என்னும் இடத்தில் ‘மு ஸ்லீம் ’ என்று பதிவு செய்துவிடுகிறார்கள் என்று தெரிவித்துள்ளார். முஸ்லீம்களின் மதம் “ இஸ்ல ாம்” என்றும், இஸ்லாம் சமயத்தை ஏற்றுள்ளவர்கள் முஸ்லீம்கள் ஆவர் என்றும், இஸ்லாம் என்று இருக்கவேண்டிய இடத்தில் முஸ்லீம் என்று பதிவு செய்துவிடுவதால், பிற்காலத்தில் பல குழப்பங்கள் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, பதிவு நிலையங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் மற்றும் அரசு துறைகளிலும் முஸ்லீம் மதம் என்று குறிப்பிடும் இடத்தில் ‘ இஸ்லாம் ’ என்று குறிப்பிட்டு பதிவு செய்வதற்கு அரசு மற்றும் கல்வித் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தமிழ் நாடு வக்ஃபு வாரியம், முதன்மை செயல் அலுவலர், பள்ளிப் பதிவேடுகள், பிறப்பு இறப்பு பதிவேடுகள் உட்பட

அனைத்து ஆவணங்களிலும் முஸ்லீம்களின் மதம் பற்றிய குறிப்பில் 'மு ஸ்லீம் ' என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக 'இஸ்லாம்' என்று குறிப்பிடும்படி அரசை கேட்டுக்கொண்டு தமிழ் நாடு வக்ஃபு வாரிய குழுமம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்று தெரிவித்துள்ளார். அதற்கேற்ப தேவையான நடவடிக்கையெடுக்குமாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. தமிழ் நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்தது. அண்டை மாநிலங்களான கேரளம் மற்றும் கர்நாடகத்தில் 'மு ஸ்லீ ம்' இனத்தவரின் மதம் ' இஸ்லாம் ' என்பது குறிப்பிடப்படுவதாகவும் தெரியவருகிறது. எனவே, தமிழ் நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலரின் பரிந்துரையை ஏற்று, பிறப்பு இறப்பு புள்ளி பதிவேடுகள் மற்றும் அரசு ஆவணங்களில் முஸ்லீம்களின் மதம் பற்றிய குறிப்பில் ' இஸ்லாம் ' என்று குறிப்பிடுமாறு ஆணையிடலாம் என்று அரசு முடிவு செய்கிறது.

இம் முடிவின்படி, பிறப்பு இறப்பு பள்ளிப் பதிவேடுகள் உட்பட அனைத்து அரசு ஆவணங்களிலும் முஸ்லீம்களின் மதம் பற்றிய குறிப்பில் ' இஸ்லாம் ' என்று குறிப்பிடுமாறு அரசு ஆணையிடுகிறது.

பெறுநர்:
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை-5.
மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர், சென்னை -5.
உறுப்பினர் செயலர்,
மாநில சிறுபான்மையினர் ஆணையம், சென்னை - 18.
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ் நாடு வக்ஃபு வாரியம், சென்னை -20.
தலைவர்,
தமிழ் நாடு மாநில இந்திய யூனியன் முஸ்லீம் லீக்,
1, வால்லேஸ் கார்டன் மூன்றாம் தெரு, சென்னை -6.
நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை -5.
செயலர், தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2,
தலைவர், தமிழ் நாடு ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை -2.
அனைத்துத் துறைச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை 9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாநகராட்சிகள் ( சென்னை, மதுரை, கோவை, திருச்சி சேலம் மற்றும் திருநெல்வேலி)

நகல்:
ஆணையர்,
தமிழ் நாடு இல்லம், சாணக்யபுரி, புதுடெல்லி -21.
பதிவாளர்,
சென்னை உயர் நீதிமன்றம், சென்னை 101.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் - மிமி,
சென்னை -9.
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை -9.

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்.
பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
அனைத்து பல்கலைக் கழக பதிவாளர்கள்.

இருப்புக் கோப்பு/உதிரி நகல்கள்.